



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, மேல்மருவத்தூர், ஆன்மீகத் தொண்டு மக்கள் இயக்கத்தின் தலைவர் கோ.ப.அன்பு மற்றும் துணைத் தலைவர் கோ.ப.செந்தில் ஆகியோரை, முன்னாள் அமைச்சர்கள் சட்டமன்ற எதிர்க்கட்சி கொறடா எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் சந்தித்து வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு ஆதரவு கோரினர். முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் து.கதிர்ஆனந்த், எம்.எஸ்.தரணிவேந்தன், க.செல்வம் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

‘நீட்’ ஒழிப்பு கையெழுத்தியக்கம்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கையெழுத்திட்டார்!





நீட் ஒழிப்புப் போராளி தங்கை அனிதாவின் சகோதரர் மணிரத்னம் அவர்களின் ஏற்பாட்டில், நீட் ஒழிப்பு கூட்டியக்கம் முன்னெடுக்கும் நாடு தழுவிய அளவிலான கையெழுத்து இயக்கத்தில் பங்கேற்று நீட் ஒழிப்புக்கு ஆதரவாக கழக இளைஞர் அணிச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கையெழுத்திட்டார். தங்கை அனிதாவின் தியாகத்தால் தமிழ்நாட்டில் இருந்து புறப்பட்ட நீட் ஒழிப்புக் குரல் இன்று நாடு முழுவதும் பரவியுள்ளது. நீட் தேர்வில் மட்டுமல்ல – நீட் தேர்வே ஒரு மோசடி என்பதை நாடெங்கும் கொண்டு சேர்த்து, அநீதியான நீட் தேர்வுக்கு முடிவுகட்ட இந்த கையெழுத்து இயக்கம் துணை நிற்கட்டும்!

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; இந்த ஆட்சியிலே லஞ்சம் கொடுத்தாதான் அரசு வழக்கறிஞராக முடியும்ன்னு சொல்றது உண்மையா இருக்குமா?

பட்டணம் : **ஆமாமய்யா; உயர்நீதிமன்றமே இதப்பத்தி விசாரிக்க லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவு போட்டிருக்காம். உண்மை இல்லாமலா இருக்கும். ‘தூய ஆட்சி’ன்னு சொல்றவர்தான், என்ன பண்ண போறாரோ தெரியல!**

முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு!

கிராமப் பெண்கள் சபைக் கூட்டம்! இளம் பேச்சாளர்கள் பங்கேற்பு!

மதுராந்தகம், செப்.30:

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் வேட்பாளர் இ பரந்தாமனை ஆதரித்து சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு கிராம பெண்கள் சபை கூட்டம் அண்டவாக்கம், புதுப்பட்டு, மேல்மா உள்ளிட்ட கிராமங்களில் நேற்று மாலை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா, இளம் பேச்சாளர்கள் ஸ்ரீலேகா, ஜோதி, ரோஜா ஆகியோர் கலந்து கொண்டு கிராம பெண்கள் மத்தியில் பேசுகையில் ஆடி பாடி உங்களிடம் வாக்குகளை பெற்று முதலமைச்சர் விஜய் வெற்றி பெற்றுவிட்டார்.

மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது கூட புரிதல் இன்றி ஆட்சியில் அமர்ந்து இருக்கிறார்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்றால் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு சிறந்த ஆசிரியர் ஒருவர் பாடம் நடத்துகிறார்.

அந்த ஆசிரியர் பிடிக்க வில்லை புது ஆசிரியரிடம் கல்வி கற்க வேண்டும் என்று பிள்ளைகள் செல்கின்றனர் அதற்காக வேறொரு ஆசிரியரை நியமித்தனர் ஆனால் அந்த ஆசிரியர் ஆடுகிறார் பாடுகிறார் கல்வி பற்றி ஏதுமே தெரியவில்லை அது போன்று தான் தற்பொழுது முதலமைச்சர் விஜய் நீங்கள் எல்லாம் அறியாமலும் தெரியாமலும் வாக்களித்து விட்டீர்கள் இதனால் சட்டமன்றத்தில் உள்ள முதலமைச்சர் உட்பட அமைச்சர்களும் எம்எல்ஏக்களும் நடித்துக் காட்டி ஆடிப் பாடுகின்றனர் மக்களின் பிரச்சினைகளை பேசுவதற்கு தமிழில் கூட உச்சரிக்கத் தெரியாமல் ஆட்சியாளர்கள் உள்ளனர்.

இதெல்லாம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கும் போதே அதிமுகவில் இருந்து எம்எல்ஏ வை விலைக்கு வாங்கி ராஜினாமா செய்ய வைத்துள்ளனர் இதனால்தான் இந்த இடைத்தேர்தல் நடைபெறுகிறது என்றனர்.

மேலும் மேயர் பிரியா ராஜன் பேசுகையில் ஊராம் ஊட்டு நெய்யில ஸ்வீட் செய்யாதீர்கள் என்று சொன்னவர் தான் முதல்வர் விஜய் ஆனால் தொழில் முதலீடுகளை ஈர்க்கப் போகிறேன் என்று சொல்லி விட்டு கார் ரேஸ் பார்க்கப் போகிறார் எம்எல்ஏக்களுக்கு எல்லாம் கார் கொடுக்கிறார் இதுதான் உண்மையான ஊரான் வீட்டு நெய்யில் ஸ்வீட் செய்வது. இதே மதுராந்தகம் தொகுதியில் மாற்று திறனாளி குழந்தை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுள்ளது நாமெல்லாம் பெண் குழந்தை வைத்துள்ளோம் அந்த பயம் நமக்கும் இருக்கும் இதற்கெல்லாம் முடிவு கட்ட வேண்டும் என்றால் இந்த இடைத்தேர்தலில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் அளித்து வெற்றி பெற வைக்க வேண்டும் என்று பேசினார்.

இதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் சேகர்பாபு பேசுகையில் இந்த இடைத்தேர்தல் நடைபெறுவதற்கு துரோகம் தான் காரணம் மான முள்ள ஒவ்வொருவரும் உதயசூரியன் சின்னத்திற்கு தான் வாக்களிப்பர் இந்த பகுதியில் பட்டா வழங்க வேண்டும் என்று கேட்டு உள்ளீர்கள் நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற வைத்தால் எம்எல்ஏவாக பரந்தாமன் கோட்டைக்கு செல்வார் எதிர்க்கட்சித் தலைவருடன் சட்டமன்றத்திலே உங்களுக்கெல்லாம் பட்டா கேட்டு பெற்று தருவார் என்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமைக் கழக பேச்சாளர் தமிழன் பிரசன்னா, ஒன்றிய செயலாளர் சத்திய சாய் நாதன், திருஞான செல்வம்,பகுதி செயலாளர்கள் வே.வாசு,கூ.பீ.ஜெயின்,சொ.வேலு,வி.சுதாகர்,மாமன்ற உறுப்பினர்கள் சரிதா மகேஷ் குமார், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஏ பி பூர்ணிமா, உமா சந்தானம் 37,38, 57 பாகப் பொறுப்பாளர்கள் மணிபால்,நாகப்பன்,ஏசுதாஸ்,நவீன்குமார்,முனியம்மாள்,தில்சாத்,ராஜகுமாரி,அஸ்வினி,யுவராணி. ஜெயபால், விஜயகுமார், உதயகுமார், ராஜேந்திரன்.R. வாசுதேவன். C.சுந்தரவரதன்,பிரதாப், மதன்பால், நாகராஜன், நாகப்பன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.







மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்: கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. பிரச்சாரம்!



மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் கழக வேட்பாளரான இ.பரந்தாமனை ஆதரித்து கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி., அவர்களின் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்.

இன்று (30.09.2026 - புதன்கிழமை)

வ.எண்	நேரம்	இடம்
1.	மாலை 5.00 மணி	கருங்குழி – மகளிர் சந்திப்பு இடம் – முகுந்தம் மஹால்
2.	மாலை 6.00 மணி	மதுராந்தகம் (கடப்பேரி) (வேன் பிரச்சாரம்)
3.	மாலை 6.30 மணி	சரவம்பாக்கம் (வேன் பிரச்சாரம்)
4.	மாலை 7.00 மணி	பெரும்பேர்கண்டிகை – மகளிர் கூட்டம் இடம் – தேசிய நெடுஞ்சாலை அருகில்
5.	இரவு 8.00 மணி	ஓரத்தி (வேன் பிரச்சாரம்)

தேர்தல் பணிக்குழு
மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் கேட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ். ரகுபதி, மதுராந்தகம் ஒன்றிய கவுன்சிலர் தமிழ்குமாரி ரவிச்சந்திரன் குடும்பத்தினருடன் வீடு வீடாக சென்று தீவிர பிரச்சாரம் மேற்கொண்டனர்.



தாராபுரம் இடைத்தேர்தல் பணிகள் தொடர்பாக திமுக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆய்வுக் கூட்டம் அணி செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் தாராபுரம் நகரக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் மாநிலத் துணைச் செயலாளர்கள் கேசவன், தமிழ்மறை, மதுரை பாலா, ஸ்ரீதரன், விஜயகதிரவன், மண்டல பொறுப்பாளர் அருண் மற்றும் அணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், துணை ஒருங்கிணைப்பாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர். தாராபுரம் தொகுதியில் கழக வேட்பாளரின் வெற்றிக்காக களத்திலும், சமூக வலைத்தளத்திலும் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, தொடர்ச்சியாக பணிகள் மேற்கொள்வது குறித்த ஆலோசனைகளை வழங்கினார்.